V/ SAIVAPRAGASA LADIES COLLEGE – TECHNOLOGY STREAM (2021) - AGRICULTURAL SCIENCE - V/ SAIVAPRAGASA LADIES COLLEGE – TECHNOLOGY STREAM (2021) – AGRICULTURAL SCIENCE – V/ SAIVAPRAGASA LADIES COLLEGE – TECHNOLOGY STREAM (2021) – AGRICULTURAL SCIENCE - V/ SAIVAPRAGASA LADIES COLLEGE – TECHNOLOGY STREAM (2021) - AGRICULTURAL SCIENCE - V/ SAIVAPRAGASA LADIES COLLEGE – TECHNOLOGY STREAM (2021) AGRICULTURAL SCIENCE - V/ SAIVAPRAGASA LADIES COLLEGE –

# V/ SAIVAPRAGASA LADIES COLLEGE

## இடைத் தவணைப் பரீட்சை - 2019 (JULY)

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021**

**General Certificate of Education (Adv. Level) Examination, 2021**

| விவசாய விஞ்ஞானம் Agricultural Science | 08 | T | I/II | இரண்டு மணித்தியாலம் Two hours |
|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

சுட்டெண் :-……………………….

- ❖ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் **உமது சுட்டெண்ணை** எழுதுக.
- ❖ தரப்பட்டுள்ளன **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ **கணிப்பான் பயன்படுத்தப்பட இடமளிக்கப்படாது.**

## பல்தேர்வு வினாக்கள்

01. தலா மொத்த தேசிய உற்பத்தி எனப்படுவது,

(1) மொத்த தேசிய உற்பத்தியினை நாட்டிலுள்ள தொழில்செய்வோரினால் வகுக்கும்போது பெறப்படும் பெறுமானமாகும்.

(2) மொத்த தேசிய உற்பத்தியினை தலா வருமானத்தினால் வகுக்கும்போது பெறப்படும் பெறுமானமாகும்.

(3) மொத்த தேசிய உற்பத்தியை சனத்தொகையால் வகுக்கும்போது கிடைக்கும் பெறுமானமாகும்.

(4) மொத்த தேசிய உற்பத்தியினை பங்குச் சந்தையின் நாளாந்த புரள்வினால் வகுக்கும்போது கிடைக்கும் பெறுமானமாகும்.

(5) மொத்த தேசிய உற்பத்தியை வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கினால் வகுக்கும் போது கிடைக்கும் பெறுமானமாகும்.

02. இராசரட்டை நீர்வள நாகரிகத்தில் அமைக்கப்பட்ட மிகப்பெரிய குளம்,

(1) பராக்கிரம சமுத்திரம் (2) சேனாநாயக்க சமுத்திரம் (3) கலாவாவி
(4) பசவக்குளம் (5) மின்னேரியா

03. உள்ளூர் உப உணவுப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலான விவசாயக் கொள்கை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு,

(1) 1991 (2) 1998 (3) 2001 (4) 2003 (5) 2013

04. இலங்கையில் தாவர மண்டபப்படுத்தல் (Quarantine) சேவை அமைந்திருப்பது,

(1) கன்னொருவையிலாகும் (2) கட்டுநாயக்கவிலாகும் (3) பொலன்னறுவையிலாகும்
(4) அம்பாந்தோட்டையிலாகும் (5) மகா இலுப்பள்ளமவிலாகும்

05. நாட்டில் அதிக எண்ணிக்கையான குளங்களைக் கொண்ட மாவட்டம்,

(1) அம்பாறையாகும் (2) மட்டக்களப்பாகும் (3) மொனராகலயாகும்
(4) அனுராதபுரமாகும் (5) இரத்தினபுரியாகும்

06. மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு படிப்படியாக குறைவடைவதற்கான காரணம்,

(1) விவசாய துறை சார்ந்த உற்பத்திகள் பல இறக்குமதி செய்யப்படல்

(2) விவசாயத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைவடைதல்

(3) பயிர் செய் நிலங்கள் வேறு கைத்தொழில்களுக்கெனப் பயன்படுத்தப்படல்

(4) அபிவிருத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு குறைவடைதல்

(5) விவசாயத்தினை விட அதிக வீதத்தில் கைத்தொழில் சேவைகள் விருத்தியடைதல்

07. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் பங்களிப்பைச் சதவீதமாகக் காட்டும்போது அதன் சரியான ஒழுங்குமுறையாக அமைவது,

(1) சேவை $<$ கைத்தொழில் $<$ விவசாயம்

(2) சேவை $<$ விவசாயம் $<$ கைத்தொழில்

(3) கைத்தொழில் $<$ சேவைகள் $<$ விவசாயம்

(4) விவசாயம் $<$ கைத்தொழில் $<$ சேவை

(5) விவசாயம் $<$ சேவை $<$ கைத்தொழில்

08. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களை மட்டும் கொண்ட தொகுதி,
   (1) சேனாநாயக்க சமுத்திரம், உடவலவை, கொத்மலை, ரன்தெனிகலை
   (2) உடவலவை, பொல்கொல்லை, லுனுகம்வெகர, ரன்தெனிகலை
   (3) லுனுகம்வெகெர, கல்ஓயா, ரத்கிந்தை, மாதுருஓயா
   (4) கொத்மலை, ரன்தெனிகலை, விக்டோரியா, ரண்டம்பை
   (5) சந்திரிகா குளம், சேனாநாயக்க சமுத்திரம், மாதுருஓயா, ரண்டம்பை

- குளமொன்றின் பிரதான பகுதிகள் சில பின்வருமாறு. இவற்றை அவதானித்து 09 - 11 வரையான வினாக்களுக்கு விடை தருக.

   A - அலைதாங்கி    B - வான்கதவு / சுருங்கை
   C - கலிங்கல் தொட்டி    D - நீர்க்கல
   E - கலிங்கல்

09. கரைகளில் ஏற்படும் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துவற்காக அமைக்கப்பட்டுள்ளது,
   (1) A    (2) B    (3) C    (4) D    (5) E

10. குளமொன்றிலிருந்து நீர் விநியோகிக்கப்படுவது,
   (1) A மூலம்    (2) B மூலம்    (3) C மூலம்    (4) D மூலம்    (5) E மூலம்

11. குளத்தில் காணப்படும் நீர் மட்டம் பற்றி அறிந்துகொள்ள முக்கியமாக உதவுவது,
   (1) A    (2) B    (3) C    (4) D    (5) E

12. இலங்கையில் அக்கால மன்னராட்சியின்போது அனுராதபுரப்பகுதியில் காணப்பட்ட நீர்த்தட்டுப்பாட்டை நீக்குவதற்காக கலாவாவியிலிருந்து நீரைக் கொண்டுசெல்வதற்காக அமைக்கப்பட்ட பிரசித்திபெற்ற நீர்ப்பாசனக் கால்வாய்த் தொகுதி,
   (1) மினிப்பே கால்வாய்    (2) மஹகனதராவ    (3) ஹெமில்டன் கால்வாய்
   (4) பசவக்குளக் கால்வாய்    (5) யோத கால்வாய்

13. இலங்கையின் தேசிய விவசாயக் கொள்கையில் பின்வரும் குறிக்கோள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஒரு மாணவன் கூறுகின்றான்.
   A - உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
   B - அத்தியாவசிய விவசாயப் பண்டங்களை இறக்குமதி செய்தல்
   C - விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
   மேற்படி கூற்றுக்களுள் சரியானது / சரியானவை,
   (1) A மாத்திரம்    (2) C மாத்திரம்    (3) A, B மாத்திரம்
   (4) A,C மாத்திரம்    (5) B, C மாத்திரம்

14. இலங்கையினுள் பல்வேறு நோய் பீடைகள் பிரவேசித்தலைத் தடுத்தல் தாவர பாதுகாப்பு சட்டத்தின் நோக்கமாகும். இதில் அதிகாரம் கொண்ட உத்தியோகத்தராகச் செயற்படுபவர்,
   (1) தாவரக்கன்றுகளை மண்டபப்படுத்தல் நிறுவனத்தின் பணிப்பாளராவார்.
   (2) விவசாயத் திணைக்களத்தின் பூச்சியியல் பிரிவின் பணிப்பாளராவார்.
   (3) தாவர நோயியற் பிரிவின் பணிப்பாளராவார்.
   (4) விவசாயத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாவார்.
   (5) பீடைக்கொல்லிச் செயலாளர் அலுவலகத்தின் செயலாளராவார்.

15. நிலைத்து நிற்கக்கூடிய விவசாயக் கொள்கையின் நோக்கங்கள் சில பின்வருமாறு,
   A - உள்நாட்டு விவசாயத்தை அபிவிருத்தியடையச் செய்வதை மட்டும் நோக்காகக் கொண்டுள்ளது.
   B - வறுமையைக் குறைத்தல், நிலைத்து நிற்கக்கூடிய சமூக பொருளாதார செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான முன்மாதிரியாக செயற்படல்.
   C - சுற்றாடல் நேய தொழினுட்பங்களின் மூலம், உணவுப் பொருட்கள் பாதுகாப்பை அதிகரித்தல், தொழில்வாய்ப்பு விற்பனை போன்றவற்றில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

   இவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்கள்,
   (1)B மாத்திரம்    (2)C மாத்திரம்    (3)A, B மாத்திரம்
   (4)A, C மாத்திரம்    (5)B, C மாத்திரம்

## அமைப்புக் கட்டுரை வகை வினாக்கள்

**01.** மகாவலி அபிவிருத்தித் திட்டம், இலங்கையில் இதுவரை காலமும் இடம்பெற்ற திட்டங்களில் மிகப் பெரிய திட்டமாகும்.

i. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட,

a. மிகக் குறைந்தளவு நீரைக் கொள்ளக்கூடிய நீர்த்தேக்கத்தின் பெயர் யாது?

……………………………………………………………………………………………

b. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நான்க்கு நோக்கங்களைத் தருக.

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

c. ……………………………………………………………………………………

d. ……………………………………………………………………………………

ii. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்பட்ட இரண்டுடு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

**02.** பண்டைக் காலத்தில் நீர்ப்பாசனத் தொகுதியானது குளம், கால்வாய்கள், அணைக்கட்டுபோன்றவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

i. பின்வரும் குளங்களைக் கட்டிய மன்னர்களது பெயர்களைக் குறிப்பிடுக.

a. திசாவாவி -……………………………………………………………………

b. மின்னேரியா வாவி- ……………………………………………………………

c. கலாவாவி – ……………………………………………………………………

d. பராக்கிரம சமுத்திரம் -…………………………………………………………

ii. பண்டைய இலங்கை மன்னர்கள் குளங்களைக் கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கான பிரதான காரணங்கள் இரண்டு தருக.

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

**03.** இலங்கையின் எழுத்துமூல வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமாக, ஆதிகாலந் தொட்டு தன்னிறைவு நிலை காணப்பட்டதை அறியக் கூடியதாக உள்ளது.

i. அக்காலத்தில் இலங்கையில் தன்னிறைவுப் பொருளாதாரம் காணப்பட்டமைக்கான இரண்டு சான்றுகளைக் குறிப்பிடுக.

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

ii. பண்டைக் காலத்தில் தன்னிறைவுப் பொருளாதாரம் ஏற்பட்டமைக்கான இரண்டு காரணங்கள் தருக.

a. ……………………………………………………………………………

b. ……………………………………………………………………………

iii. இலங்கைக்கு கீழைத்தேய தானியக் களஞ்சியம் எனும் புகழ் நாமம் கிடைப்பதில் பங்களிப்பினைச் செய்த மன்னரொருவரைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

iv. தன்னிறைவுப் பொருளாதாரம் காணப்பட்டதற்கான எழுத்துமூல ஆவணமொன்றின் பெயரைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

**04.** பிரித்தானியரின் ஆட்சியின்போது இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு முதலிடம் வழங்கப்பட்டது.

i. பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகஞ்செய்யப்பட்ட நான்கு பெருந்தோட்டப் பயிர்கள் எவை

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

c. ……………………………………………………………………………………

d. ……………………………………………………………………………………

ii. பெருந்தோட்டத் கைத்தொழில் முறையால் ஏற்பட்ட இரண்டு நன்மைகளைத் தருக.

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

iii. பெருந்தோட்டச் செய்கையால் ஏற்பட்ட மூன்று பாதிப்புக்களைக் குறிப்பிடுக.

a. ……………………………………………………………………………………

b. ……………………………………………………………………………………

c. ……………………………………………………………………………………

iv. தற்காலத்தில் செய்கை பண்ணப்படுகின்ற, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட மரபுரீதியற்ற இரண்டு விவசாய பயிர்களை குறிப்பிடுக.

a. ………………………………………………

b. ………………………………………………

# கட்டுரை வினாக்கள்

**01.** a). பசுமைப்புரட்சியின் காரணமாக விவசாயக் கைத்தொழிலில் ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத தாக்கங்கள் எவை?

b). இலங்கையில் விவசாயத் துறை எதிர்நோக்கும் சவால்களைக் குறிப்பிட்டு அவற்றை எவ்வாறு எதிர்கொள்ளலாம் எனவும் குறிப்பிடுக?

c). நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் வகிக்கும் பங்கினை விளக்குக?

**02.** a). இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் பங்கு கொண்டுள்ள விவசாயத் துறைகள் பற்றி விளக்குக?

b). இலங்கையின் விவசாய அபிவிருத்தியில் பங்கு கொண்டுள்ள தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை விளக்குக?

c). இலங்கையின் விவசாயத்தை மேலும் விருத்தி செய்வதற்கான ஆற்றலை விவரிக்குக?